1967 நவம்பர் 24]

வேண்டுமென்றால் உயர் நீதிமன்றம் அதற்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும். மதுரை மாவட்டம் சம்பந்தப்பட்ட உயர் நீதிமன்றங்கள்தான் ஏராளமாக அந்த மஹாலிலே இருந்தன. அந்த மஹாலுக்கு ஆபத்து என்று இப்பொழுது அல்ல, பல ஆண்டு களாகவே கூறப்பட்டு வருகின்றது. அந்த மஹாலை செப்பனிட மத்திய அரசும் பண உதவி செய்ய முன் வந்திருக்கிறது. ஆகவே, நீதி மன்றஙகளுக்காகத் தனியாகவே புதுக் கட்டிடத்தைக் கட்ட உத்தேசித்து இருக்கிறோம். அப்பொழுது எல்லா நீதிமன்றங் களையும் அந்தப் புதிய கட்டடத்திற்குக் கொண்டு வந்து அதை மஹாலை சரித்திரப் பிரசித்தி பெற்ற இடமாக ஆக்க அரசாங்கம் முன் வந்திருக்கிறது.

*423 வின—திரு. கரு. சீமைச்சாமி: மதிப்பிற்குரிய சட்ட, கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரையில் புது கோர்ட் கட்டடங்கள் கட்டுவதற்கான இடம் தீர்மானிக்கப்பட்டுவிட்டதா ?

(இ) ஆம் எனில், இக் கட்டடங்களுக்கான எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டுவிட்டதா ?

(உ) எஸ்டிமேட் தொகை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(a) Yes, at Sengulam Tank Bed, **Madurai.**

(b) Yes.

(c) About Rs. 35 lakhs.

திரு. கரு. சீமைச்சாமி : சார், இந்தப் புதிய கட்டிடத்திலே இராமநாதபுரம் மாவட்டத்திற்கான அத்தனை கோர்ட்டுகளும் இருக்குமா ? அல்லது மதுரை மாவட்டத்திற்கு மட்டும் அதிலே செயல்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் முன்னரே கூறியபடி இராமநாதபுரம் என்று சொல்லும்போது சில நீதிமன்றங்கள் தான் மதுரையிலே இருக்கின்றன. அந்த நீதிமன்றங்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்படும் வரை இதே கட்டிடத்தில் தான் இருக்கும்.

* 424 வின—திரு. நா. சௌந்தரபாண்டியன் : மதிப்பிற்குரிய சட்ட, கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரில் ஒரு முன்சீப் கோர்ட் ஆரம்பிப்பதற்கான உத்தேசம் ஏதேனும் பரிசிலனை யிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், இப்போது அது எந் நிலையில் இருக்கின்றது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.